**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**
**முன்னிலை: திருமதி.எஸ்.சப்னா,B.B.M.,L.L.M.,**
**நீதித்துறை நடுவர், பல்லடம்**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 09 ஆம் நாள்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 54/2020**
**CNR No.TNTI11 000367 2020**

அரசுக்காக:
காவல் ஆய்வாளர்,
பல்லடம், காவல் நிலையம்
(குற்ற எண்.476/2019) ... புகார்தாரர்

– எதிர் –

பிரதாப்குமார் (வயது 23),
த/பெ.செல்வன்,
2/162 ஏடி காலனி,
வடுகபாளையம், எலவந்தி,
பல்லடம். ..... எதிரி

**குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், பல்லடம்**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.54/2020**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட ROC. No. 814/2020 F1 (P.Dis.No.36/2021) படியும் விதி 106 Criminal Rules of Practice –2019 ன்படியும் வழக்கின் தொகுப்பு கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| S.No. | Case summary | | | |
|---|---|---|---|---|
| (I) | The Period of remand of the accused | Name of the accused | Date of Remand | Release on |
| | | Pradhapkumar | 11.05.2019 | 11.05.2019 |
| (ii) | Date of filling of the complaint/ final report in the court | Filling of Complaint | Filing of Final report | |
| | | Complaint Statement on 30.04.2019 | பல்லடம் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் 04.07.2020 தேதியன்று தாக்கல் செய்யப்பட்டது. | |
| (iii) | Date of Committal of the case to the court of Sessions | Not applicable | | |
| (iv) | Date of Questioning of the accused under section 279,304(A) of IPC and 146 | 15.02.2022 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | r/w 196, 192 MV Act as the case may be | | | |
| (v) | Filing of all Miscellaneous petitions and their results | Crl.M.P.No. | Date of filing | Result |
| | | - | - | - |
| (vi) | Date of Examination in chief and cross | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1- Bakkiyammal | 04.08.2025 | 04.08.2025 |
| | | PW2- Selvaraj | 04.08.2025 | 04.08.2025 |
| | | PW3- Dharmaraj | 27.01.2026 | 27.01.2026 |
| | | PW4- Palanisamy | 27.01.2026 | 27.01.2026 |
| | | PW5- Ravi | 27.01.2026 | 27.01.2026 |
| | | PW6- Rameshkannan | 17.02.2026 | 17.02.2026 |
| (vii) | Date of Examination of the accused under section 313 of the Code | | | 24.02.2026 |
| (viii) | Details of abscond of an accused and his appearance/production, as the case may be | | | Nil |
| (ix) | Grant of stay by Superior Courts and the results there of | | | Nil |

இந்த வழக்கானது கடந்த 06.07.2020–ஆம் தேதி CC.No.54/2020–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசுக்காக அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.S.செந்தில் குமார் அவர்களும், எதிரிக்காக எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P.சக்திவேல், அவர்கள் முன்னிலையாகியும் கடந்த 30.07.2025 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப் பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1)கடந்த 30.04.2019 ம் தேதி 15.15 மணிக்கு பல்லடம் பகுதிக்குட்பட்ட பல்லடம் – மாணிக்காபுரம் ரோடு கணபதி சைசிங் அருகில் இறந்துபோன திருமூர்த்தி ரோட்டின் கிழபுற ஓரமாக நின்று கொண்டிருந்தபோது எதிரி பிரதாப்குமார் வடக்கிலிருந்து தெற்குநோக்கி TN 38 E 0975 என்ற ஸ்பிளண்டர் மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், கவனக் குறைவாகவும் மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் ஓட்டிச் சென்று திருமூர்த்தியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியும், விபத்தில் திருமூர்த்திக்கு இடது முன்கையிலும், இடது முழங்காலுக்கு கீழும், வலது முழங்காலிலும், நெற்றியின் இடதுபக்கத்திலும் காயங்கள் ஏற்பட்டு இறப்பை

ஏற்படுத்தியும், விபத்து சமயத்தில் எதிரி பிரதாப்குமார் TN 38 E 0975 என்ற ஸ்பிளண்டர் மோட்டார் சைக்கிளை காப்பீட்டுச் சான்று இல்லாமல் ஓட்டிச் சென்றும், மேற்படியான வாகனத்தின் பதிவுச் சான்றை புதுப்பிக்காமல் ஓட்டிச்சென்றதாக எதிரி மீது சட்டப் பிரிவுகள் 279,304(A)இதச மற்றும் 146 r/w 196,192 of MV Act ன் கீழ் பல்லடம், காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2)எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் எதிரிக்கு அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207 ன் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட்டது.

**<u>குற்றத்தின் சாராம்சத்தையும் குற்றத்தினையும் விவரித்தல்:</u>**

3)எதிரிக்கு போதியகால அவகாசம் கொடுக்கப்பட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279,304(A)இதச மற்றும் 146 r/w 196,192 of MV Act கீழான குற்றம் பற்றி, விளக்கி கூறி வினவியபோது எதிரி குற்றங்களை மறுத்து கூறி சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4)அதன்படி, அரசுதரப்பில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரை பட்டியலிடப் பட்டு, எதிரி மீதான குற்றத்தினை நிரூபிக்கும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**<u>5) அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கானது, பல்லடம், மாணிக்காபுரம், 3/428 சிவசக்தி நகரை சேர்ந்த பாக்கியம்மாள் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தொடரப்பட்டுள்ளது. அவர் அ.சா.1 ஆக விசாரிக்கப் பட்டு அவர் மூலம் அ.சா.ஆ.1 புகார் குறியீடு செய்யப் பட்டுள்ளது. அ.சா.1 அவரது புகாரில் அ.சா.1 அவரது குடும்பத்துடன் குடியிருந்து வருவதாகவும் அ.சா.1 க்கும் அவரது கணவருக்கும் வயதான காரணத்தால் எந்த வேலைக்கும் செல்வதில்லை அவர்களுக்கு ஈஸ்வரி, ரஞ்சிதம், ராஜாமணி, என்ற

மூன்று மகள்களும், செல்வராஜ், பழனிச்சாமி என்ற இரண்டு மகன்களும் உள்ளதாகவும் அனைவருக்கும் திருமணமாகிவிட்டது என்றும் அவர்கள் இருவரும் செல்வராஜ் குடும்பத்தாருடன் இருந்து வருவதாகவும் பல்லடம் மாணிக்காபுரம் ரோட்டில் உள்ள வைரம் நகரில் அவரது உறவினர் ஈம சடங்கிற்கு செல்ல வேண்டி அ.சா.1ம் அவரது கணவரும் வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றதாகவும் வைரம் நகர் சென்று கணபதி சைசிங் தோட்டத்திற்கு அருகே சென்றபோது அ.சா.1 ரோட்டின் மேபுறம் உள்ள மளிகை கடைக்கு சென்று வருவதாக சொல்லி விட்டு சென்றதாகவும் அவரது கணவர் ரோட்டின் கிழபுறமாக நின்று கொண்டிருந்தபோது கடந்த 30.04.2019ம் தேதி மாலை சுமார் 3.15 மணியளவில் அ.சா.1 மளிகை பொருட்கள் ஆர்டர் செய்து திரும்ப மளிகை கடை முன்பு நின்று கொண்டிருந்தபோது மாணிக்காபுரம் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக வந்த ஒரு பைக்கின் ஓட்டுநர் பைக்கை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து அவரது கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதில் அவரது கணவர் தூக்கிவீசியதை பார்த்த அ.சா.1ம் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடிபோய் பார்த்ததில் அவரது கணவருக்கு வலது கால் முட்டிக்கு கீழ் பலத்த மொக்கை காயமும், இடது காலில் இரத்த காயமும் தலையில் மொக்கை காயமும் ஏற்பட்டு இருந்தது உடனே உடன் இருந்தவர்கள் ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி அ.சா.1ம் உடன் இருந்தவர்கள் அவர்களுக்கு தெரிந்த முதலுதவியை செய்ததாகவும் விபத்தை ஏற்படுத்தியவருக்கு லேசான சிராய்ப்பு காயம் ஏற்பட்டு இருந்தது உடன் இருந்தவர்கள் விசாரிக்க விபத்து ஏற்படுத்திய பைக் TN 38 J 0975 ஸ்பிளண்டர் பிளஸ் என்றும் பைக்கை ஓட்டியவர் பிரதாப்குமார் என்றும் சொன்னார்கள் ஆம்புலன்ஸ் வந்தவுடன் அ.சா.1 அவரது கணவரை பல்லடம் ஜிஎச்க்கு அழைத்து வந்து சிகிச்சைக்கு சேர்த்ததாகவும் பல்லடம் ஜிஎச்ல் முதலுதவி செய்து மேல் சிகிச்சைக்காக கோவை கேஎம்சிஎச்க்கு அனுப்ப தகவலை உடன் இருந்தவர்கள் உதவியுடன் அவரது மகனுக்கு தகவல் சொல்லி விட்டு காத்திருந்த போது பல்லடம் போலீசார் விசாரிக்க நடந்ததை சொன்னதாகவும் மேற்படி கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய பிரதாப்குமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

6)இவ்வழக்கு விபத்தில் இறந்துபோனவரின் பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியாக அ.சா.2 செல்வராஜ் என்பவரும் பார்வை மகசர் சாட்சியாக அ.சா.3 தர்மராஜ் என்பவரும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

7)இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.5 ரவி, உதவி ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 30.04.2019 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் உதவிஆய்வாளராக பணியில் இருந்தபோது தலைமை காவலர் பழனிசசாமி என்பவரால் பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 476/2019 சட்டப்பிரிவு 279,337 இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக பார்வைக்கு வைத்ததை அ.சா.5 வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கோவை, அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனிலக்காமல் 30.04.2019 ஆம் தேதி 19.30 மணிக்கு இறந்துவிட்டதாக 23.45 மணிக்கு போன் மூலம் கோவை அரசு மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் இருந்து கொடுத்த தகவலை பெற்று 01.05.2019 ஆம் தேதி 00.15 மணிக்கு இவ்வழக்கின் சட்டப்பிரிவான 279,337 இதவில் இருந்து 279,304(A) இதசவாக பிரிவு மாற்றம் செய்து அ.சா.ஆ.4 பிரிவு மாற்ற அறிக்கை தயார் செய்ததாகவும் பின்னர் அன்றே காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜோதிமணி மற்றும் தர்மராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைப்படம் தயார் செய்ததாகவும் பின்னர் சாட்சிகள் கோவை அரசு மருத்துவகல்லூரி மருத்துவ மனைக்கு காலை 8.00 மணிக்கு சென்று வழக்கில் இறந்துபோன திருமூர்த்தி பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் காலை 8.00 மணி முதல் 10.30 மணி வரை அ.சா.ஆ.6 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததாகவும் இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேத பரிசோதனைக்காக பல்லடம் காவல் நிலைய முதல் நிலைய காவலர் 1545 நாகராஜ் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்ததாகவும் சாட்சிகள் பாக்கியம்மாள், செல்வராஜ், ரமேஷ், ஜோதிமணி, தர்மராஜ், ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இத்துடன் புலன் விசாரணை முடித்து தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளர் ரமேஷ் கண்ணன் என்பவர் பார்வைக்கு வைத்ததாகவும் ஆய்வாளர் விசாரித்ததாக கூறியுள்ளார்.

8)இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 ரமேஷ்கண்ணன், காவல்ஆய்வாளர் அவரது சாட்சியத்தில் கடந்த 30.04.2019 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பல்லடம் காவல் நிலைய தலைமை காவலர் பழனிச்சாமி என்பவரால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட புலன் விசாரணைக்காக உதவிகாவல்ஆய்வாளர் ரவி அவர்களிடம் இருந்து தொடர் புலன் விசாரணைக்காக வைத்த வழக்கு கோப்பை நான் 11.05.2019 ஆம் தேதி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சம்பவ இடத்தை சென்று பார்வையிட்டதில் உதவி ஆய்வாளர் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படத்தை ஒத்திருந்ததால் தனியாக தயார் செய்யவில்லை என்றும் மேற்படி சாட்சிகள் அனைவரும் உதவிஆய்வாளர் அவர்களிடம் கூறியதையே தன்னிடம் கூறியதால் தான் அவர்களை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும் பின்னர் இவ்வழக்கில் தொடர்ந்து புலன் விசாரணை மேற்கொண்டு இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 38 J 0975 என்ற பதிவெண் கொண்டு Splendor இருசக்கர வாகனத்தின் ஆவணங்களை சாட்சி ஹரிதாஸ் என்பவர் மூலம் நிலையத்தில் ஆஜர்படுத்தி பார்வையிட்டதில் விபத்து ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளின் பதிவெண் TN 38 E 0975 என்று தெரியவந்ததால் மேற்படி சாட்சி ஹரிதாஸை அன்றே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் மேலும் இந்த தகவலை சாட்சி செல்வராஜிற்கு தெரிவித்து அவரையும் மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும் அதன் பின்னர் இவ்வழக்கில் வாகன விபத்தை ஏற்படுத்தி உயிரிழப்பு செய்த குற்றத்திற்காக எதிரி பிரதாப்குமார் என்பவரை அன்று காலை 10.00 மணிக்கு நிலையத்தில் வைத்து கைது செய்து மேற்படி எதிரியை தக்க இருநபர் பிணையில் விடுவித்ததாகவும் அதன்பின்னர் இவ்வழக்கின் எதிரி பயன் படுத்திய வாகனமான TN 38 E 0975 என்ற வாகனத்தை ஆய்வு செய்து ஆய்வறிக்கை பெறவேண்டி திருப்பூர் தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியதாகவும் பின்னர் 13.09.2019 ஆம் தேதி மேற்படி எதிரி வாகனத்தை ஆய்வு செய்து அ.சா.ஆ.7 ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. பாஸ்கர் என்பவரையும் இவ்வழக்கில் வாகன விபத்தால் காயமடைந்த திருமூர்த்தி அவர்களுக்கு முதல்உதவி

செய்த பல்லடம் அரசு மருத்துவர் திரு. ஆனந்த் அவர்களையும் இவ்வழக்கில் இறந்து போன திருமூர்த்தி அவர்களின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து அ.சா.ஆ.9 பிரேத பரிசோதனை சான்று வழங்கிய கோவை அரசு மருத்துவமனை கல்லூரி மருத்துவர் சரவணப்பிரியா அவர்களையும் காவலர் பழனிச்சாமி மற்றும் உதவி ஆய்வாளர் ரவி அவர்களையும் தனித்தனியே அன்றே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் மற்றும் மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேடு ஆ.த.சா.அ.8 என்றும் மேலும் அன்றே இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப் பிரிவுகள் 279,304(A)இதச மற்றும் 146 உ/இ 196 ,192 Of MV Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது.

<u>9)கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் எதிரியிடம் வினவப்பட்ட வினாவிற்கான பதில்:</u>

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் வினவிய போது எதிரி சாட்சிகள் அனைத்தையும் பொய் சாட்சிகள் என்றும், பொய் வழக்கு என்று தெரிவித்தும், மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததால் எதிரி தரப்பு சாட்சிகள் இல்லை என்று முடிக்கப் பட்டது.

<u>அரசு தரப்பு வாதம்:</u>

10)அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சியங்கள் மூலம் எதிரி மீதான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.5 மற்றும் புலன் விசாரணை செய்த அதிகாரியான அ.சா.6 ன் சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வழக்கு மற்றும் அரசு தரப்பு சான்றாவணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே அரசு தரப்பில் எதிரிமீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 279, 304(A)இதச மற்றும் 146 உ/இ 196, 192 Of MV Act கீழான குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாகவும், எனவே எதிரிக்கு பிரிவுகள் 279, 304(A) இதச மற்றும் 146 உ/இ 196, 192 Of MV Act கீழான குற்றத்திற்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டும் என்று வாதிட்டார்.

<u>எதிரிதரப்பு வாதம்:</u>

11)இவ்வழக்கில் குற்றயிறுதியறிக்கை மற்றும் அதனுடன் தாக்கல் செய்யப்

பட்ட ஆவணங்களின் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டு இருக்கும் குற்றங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 240ன் கீழ் வினவியபோது, இவ்வழக்கு பொய் வழக்கு என்று கூறி, அரசுத்தரப்பு வழக்கை மறுத்துள்ளார். மேலும், அரசுதரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அதில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.313(i)(b) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவியபோது, சாட்சிகள் அனைத்தும் பொய் சாட்சிகள் என்று கூறி அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்துள்ளார்.

12)மேலும் எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது வழக்கு விபத்தானது எவ்வாறு யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இவ்வழக்கு சம்பவ விபத்திற்கு சாட்சியத்தின் மூலம் எதிரியின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்பது அரசு தரப்பில் தகுதிநிலை ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், அதனால் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று வாதிட்டார். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

<u>**தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:**</u>

13)இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது அ.சா.1 பாக்கியம்மாள் அவரது சாட்சியத்தில் மாணிக்காபுரம் ரோட்டில் உள்ள வைரம் நகரில் உள்ள உறவினர் வீட்டிற்கு ஈமசடங்கிற்காக செல்லவேண்டி அ.சா.1ம் அவரது கணவரும் சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் வீட்டிலிருந்து புறப்பட்டு வைரம் நகர் சென்று கணபதி சைசிங் பக்கத்தில் சென்றபோது அவரது கணவரை அங்கேயே நிற்க சொல்லிவிட்டு ரோட்டின் மேல்புறம் உள்ள மளிகை கடைக்கு சென்று அங்கு நின்று கொண்டிருந்தபோது மதியம் 3.00 மணியளவில் மாணிக்காபுரம் ரோட்டில் வடக்கில் இருந்து தெற்காக வந்த ஒரு பைக்கு அதிவேகமாக வந்து கணவர் மீது மோதியதில் அவர் தூக்கி வீசப்பட்டார் உடனே அ.சா.1ம் பக்கத்தில் இருந்தவரும் சென்று பார்த்தபோது அவரது கணவருக்கு வலது கால் துண்டாகி விட்டது தலையில் காயம் ஏற்பட்டது பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக

பல்லடம் அரசு மருத்துவ மனைக்கு சென்றதாகவும் அங்கு அவருக்கு முதலுதவி அளிக்கப் பட்டு மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்ததாகவும் அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் பல்லடத்தில் சிகிச்சையில் இருந்தபோது பல்லடம் போலீசார் விசாரிக்க நடந்த விவரத்தை அ.சா.ஆ.1 புகார் வாக்கு மூலமாக கொடுத்ததாகவும் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி தான் என்று கூறியுள்ளார்.

14)மேலும், அவரது குறுக்குவிசாரணையில் விபத்து சம்மந்தமாக புகாரை காவல் நிலையம் சென்று கொடுத்ததாகவும் அ.சா.1 ம் அவரது மகன் செல்வராஜும் சென்றதாகவும் அ.சா.1 ரேகை வைத்த தாள் யார் எழுதினார் அதில் உள்ள விவரம் எதுவும் அ.சா.1 க்கு தெரியாது என்பதாகவும் புகாருக்கு பின்னிட்டு காவல் துறையினர் அ.சா.1 ஐ விசாரிக்கவில்லை என்றும் ஒரு வருடம் கழித்து தான் வீட்டிற்கு வந்து விசாரித்ததாகவும் அ.சா.1 சாமான் வாங்கி கொண்டு மேல்புறம் ரோட்டை தாண்டி சென்றபோது சத்தம் கேட்டபோது பார்த்ததாக கூறியுள்ளார்.

15)இவ்வழக்கு விபத்தில் இறந்து போனவரின் பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியான அ.சா.2 செல்வராஜ் அவரது சாட்சியத்தில் அ.சா.1 தனது அம்மா என்றும் கடந்த 30.04.2019 ம் தேதி அவரது அப்பா, அம்மா இருவரும் மாணிக்கா புரம் ரோட்டில் வைரம் நகரில் உள்ள அவரது உறவினர் இறப்பிற்காக சென்றபோது கணபதி சைசிங் மில் அருகே அவரது அப்பா, அம்மா இருவரும் சென்ற போது அவரது அம்மா அவரது அப்பாவை அங்கேயே நிற்க சொல்லிவிட்டு மளிகை சாமான்கள் வாங்க மேல்புறம் உள்ள கடைக்கு சென்று நின்று கொண்டிருந்த போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த Splendor இருசக்கர வாகனம் அவரது அப்பாவின் மீது மோதி கை, கால், தலை ஆகிய இடங்களில் காயங்கள் ஏற்பட்டதாகவும் அவரது அப்பாவின் கால் அந்த இடத்திலேயே துண்டாகி விட்டதாகவும் அவரது அம்மா ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து அங்கிருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அழைத்து சென்றதாகவும் சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் பிரேத

விசாரணையின்போது உடனிருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

16)மேலும், அ.சா.2 அவரது குறுக்கு விசாரணையில் வழக்கு விபத்து குறித்து அ.சா.2 க்கு அ.சா.1 தகவல் சொன்னதாகவும் போலீசார் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டதாகவும் அன்றே அ.சா.2 ன் அம்மாவிடம் கோவை அரசு மருத்துவ மனையில் வைத்து கைரேகை வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 அவரது சாட்சியத்தில் அ.சா.1 ம் அவரது மகனான அ.சா.2 உடன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவர்களது சாட்சியத்தின் மூலம் அ.சா.ஆ.1 புகாரின் உண்மைத்தன்மை நிரூபணம் செய்யப் படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17)இவ்வழக்கின் பார்வைமகசர் சாட்சியாக அ.சா.3 தர்மராஜ் அவரது சாட்சியத்தில் கடந்த 2 மற்றும் 3 வருடங்களுக்கு முன் மாணிக்காபுரம் ரோட்டில் அ.சா.3 கம்பெனியில் இருந்தபோது சத்தம் கேட்டு பார்த்தபோது ஒரு பெரியவர் அடிபட்டு கிடந்தார் பின்னர் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக கூறியுள்ளார்.

18)மேலும், அ.சா.3 அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.3 மணிபாரதி டெக்ஸ் டைல்ஸ் வேலை செய்து வருவதாகவும் வேலை நேரம் காலை 9.00 – 6.00 மணிவரை என்றும் அ.சா.3 சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்றதாகவும் சுமார் ½ மணி நேரத்திற்குள்ளாக அ.சா.3 யிடம் கையொப்பம் வாங்கியதாகவும் அவர் கையொபப்ம் செய்த ஆவணத்தில் சம்பவத்தை நேரில் பார்த்ததற்காக கையொப்பம் வாங்கியதாகவும் அன்றைய தினமே கையொப்பம் வாங்கியதாக கூறியுள்ளார். ஆனால் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 அவரது சாட்சியத்தில் அ.சா.3 ஐ மறுநாள் தான் விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் அவர்களது சாட்சியத்தின் மூலம் அ.சா.ஆ.2 பார்வை மகசர் ஆவணத்தின் உண்மைத் தன்மை சந்தேகத்திற்கு அப்பாற் பட்டு நிரூபணம் செய்யப் படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

19)அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரிதான் அதிவேகமாகவும்,அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தினார் என்பது நிரூபணம் செய்யப்

படவில்லை என்றும் அரசுத்தரப்பில் வழக்கு விபத்தை கண்ணுற்ற சாட்சியாக யாரும் விசாரணை செய்யப்படவில்லை. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது விபத்தில் இறந்து போன நபர் தான் அஜாக்கிரதையாக ரோட்டை கடந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரி மீதான பிரிவுகள் 279, 304(A)இதசவின் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20)மேலும், இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது விபத்து சமயத்தில் எதிரி TN 38 E 0975 என்ற பதிவெண் கொண்ட ஸ்பிளண்டர் மோட்டார்சைக்கிளை காப்பீட்டுச்சான்று இல்லாமலும் பதிவுச்சான்றை புதுப்பிக்காமலும் ஓட்டியுள்ளார் என்பது அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.7 மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் மூலம் நிருபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் எதிரி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 146 உ/இ 196 மற்றும், 192 MV Act ன் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21)முடிவில் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழான குற்றச்சாட்டுக் களிலிருந்து குற்றவாளி இல்லை என தீர்மானித்து குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்தும், எதிரி மீதான மோட்டார் வாகன சட்டம் பிரிவு 146 உ/இ 196 MVAct ன் கீழான குற்றச் சாட்டின்படி குற்றவாளி என தீர்மானித்து எதிரி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 146 உ/இ 196 MVAct ன் கீழான குற்றத்திற்கு ரூபாய் 2000/− அபராத விதித்தும், மேற்படி அபராதத் தொகை ரூ.2000/−த்தை செலுத்த தவறினால் 1 வாரம் மெய்காவல் சிறைத் தண்டனை விதித்தும், எதிரி மீதான மோட்டார் வாகன சட்டம் பிரிவு 192 MV Act ன் கீழான குற்றச்சாட்டின்படி குற்றவாளி என தீர்மானித்து எதிரி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 192 MVAct ன் கீழான குற்றத்திற்கு ரூபாய் 2000/−அபராத விதித்தும், மேற்படி அபராதத் தொகை ரூ.2000/−த்தை செலுத்த தவறினால் 1 வாரம் மெய்காவல் சிறைத் தண்டனை விதித்தும், கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. (எதிரி அபராத் தொகை ரூ.4000/−ஐ செலுத்தி விட்டார்)

22)இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப் படவில்லை.

இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப் பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ம் நாளில் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.03.23 05:38:46 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 04.08.2025 | திருமதி.பாக்கியம்மாள் த/பெ. திருமூர்த்தி– புகார்தாரர் |
| அ.சா.2 | 04.08.2025 | திரு.செல்வராஜ் த/பெ. திருமூர்த்தி – பிரேத விசாரணையின் போது உடனிருந்த சாட்சி |
| அ.சா.3 | 27.01.2026 | திரு.தர்மராஜ் த/பெ. டேனியல் – பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.4 | 27.01.2026 | திரு.பழனிச்சாமி, சிறப்புஉதவி ஆய்வாளர் – முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அதிகாரி |
| அ.சா.5 | 27.01.2026 | திரு.ரவி,உதவி ஆய்வாளர் – புலன் விசாரணை அதிகாரி |
| அ.சா.6 | 17.02.2026 | திரு.ரமேஷ் கண்ணன், காவல் ஆய்வாளர் – புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 30.04.2019 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2/அ.சா.3 | 01.05.2019 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3/அ.சா.4 | 30.04.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4/அ.சா.5 | 01.05.2019 | பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 /அ.சா.5 | 01.05.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 /அ.சா.5 | 01.05.2019 | இறந்துபோன திருமூர்த்தி என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.7/அ.சா.6 | 21.06.2019 | TN 38 E0975 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.8/அ.சா.6 | 30.04.2019 | விபத்து பதிவேடு |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.9/அ.சா.6 | 01.05.2019 | இறந்துபோன திருமூர்த்தி என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுப் பொருட்கள்:** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருட்கள்:** இல்லை.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.03.23 05:38:53 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

**குறிப்பு**

1) எதிரி இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும் பிரிவுகள் 146 உ/இ 196 மற்றும் 192 MVAct ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டார்.

2) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்தார்.

3) வழக்கு முடிவின் விவரம் தக்க காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

4) வழக்கின் விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

5) தீர்ப்பின் நகல் மேன்மைமிகு திருப்பூர், தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.